நாலறிவுடையன
நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

ஐயறிவுடையன
மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

ஆறறிவுடையன
மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

இந்தச் சூத்திரங்களின் நுட்பம் என்னவென்றால், மனிதப் பிறப்புக்கு மட்டுமே ஆறாவது என்று எண்ணப்படுகிற மற்றொரு நுகர்ச்சி உள்ளது. ஐந்து புலன் அறிவுக்கும் மனம் இல்லாமல் முடியாது. தொட்டு அறிவது என்றாலும், தொடுவதை அறிவதற்கு மனம் வேண்டுமல்லவா! அவ்வாறே சுவையை அறிகின்ற உயிருக்கும் மனம் இல்லாவிட்டால் அந்தச் சுவையை எது அறிகிறது? மற்ற ஐம்புலனுக்கும் இதுவே பொருந்தும். ஆனால், நம் முன்னோர்கள், புலன் நுகர்ச்சியை அறிகின்ற ஆற்றலை மனம் என்று அழைக்கவில்லை. மனத்திற்கு உள்ளம் என்ற ஒரு சிறப்பைத் தந்து, ஐம்புல அறிவையும் தாண்டிய மற்றொரு நுண்ணிய அறிவையும் உணர்கின்ற ஆற்றல் பெற்ற ஆறாவது அறிவையே மனம் என்று அழைத்தார்கள்.

சித்தர்கள் மொழி வழக்கிலே மனம் என்பதற்குப் பற்பல பொருளமைதி இருப்பதால் ஏற்படும் குழப்பத்தை உணர்ந்த நிலையிலே, மனித மனத்தை, முக்கியமாக ஆறாவது அறிவைக் குறிப்பிடும் போதெல்லாம் அகஉணர்வு என்றும், உள்ளறிவு என்றும், தன்உணர்வு என்றும் அழைத்து, இந்த ஆற்றல்கள் அனைத்தும் அடங்கிய பேராற்றலை உள்ளம் என்றும் தங்கள் இலக்கியத்திலே பேசினார்கள். எனவே, அறிவு, ஐந்தறிவு, ஆறறிவு என்பதையும் மனம் என்ற சொல்லையும் ஒன்று சேர்த்துக் குழப்ப வேண்டியதில்லை. ஐம்புலன்கள் வாயிலாக அறிகிற அறிவு புல்லிலிருந்து விலங்குவரை எல்லா உயிர்களுக்கும் பொதுவானதே. ஆனால், ஐம்புலனுடைய உதவியும் இன்றி, இந்த ஐம்புலக் கதவுகளையும் தாழிட்டுவிட்டு, தனக்குள்ளே அறிகின்ற ஓரறிவு மனிதனுக்கே அவனுடைய பரிணாம வளர்ச்சியில் அமைந்திருப்பதால், அந்த ஆறாவது அறிவுக்கே மனம் என்ற சிறப்புப் பெயர் பொருந்தும். இந்த ஆற்றல் மனிதனுக்கே உரிய ஆற்றலாக இருப்பதனால்தான்,

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள

என்று சேக்கிழார் பெருமான் பாடியவாறு, ஐம்புல அறிவையும் ஒரே புலனின் வாயிலாகத் துய்க்கும் ஆற்றலும், ஐந்து புலனுமே இன்றி, ஆறாவதாகிய ஒரு நுண்புலன் வாயிலாக ஐந்தையும், ஐந்துக்கு

அப்பாலையும் அறிந்துகொள்ளுகிற பேரறிவையும் மனித மனமாகிய உள்ளம் பெற்றுள்ளது. இந்த ஒரு காரணம் பற்றியே மனம் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த மனிதன் என்ற சொல் எழுந்தது. இப்படிப்பட்ட பேராற்றலுக்கு உரிய இடமாகிய மனித மனத்தை, விலங்குகளைப் போன்று ஐம்புல அறிவின்பாற்பட்ட புலன் நுகர்ச்சிகளிலேயே வீணாக்குவது மடைமை என்று, மீண்டும் மீண்டும் சித்தர் இலக்கியம் வற்புறுத்துகிறது. இது காரணம் பற்றியே, புல்லிலிருந்து விலங்குவரை நாம் எடுக்கும் பிறவி வீணாகிறது என்று ஞானிகள் பாடுகிறார்கள். அதனால்தான் திருமூலர் குறிப்பிடுகிற,

கண்ணின்றிக் காண்பதும்
செவியின்றிக் கேட்பதும்

ஆகிய ஞான அனுபவங்களை நோக்கிச் சித்தர் இலக்கியம் மனித குலத்தை அழைக்கிறது. மாணிக்கவாசகருக்கும் தமக்கு ஞான உணர்வைத்தந்த பரம்பொருளைப் பாடுகிற சிவபுரணாத்திலே, தம்முடைய முற்பிறவிகளின் வரலாற்றையும் நினைவுகூர்ந்து, அந்த துயரங்களிலிருந்து தம்மை ஈடேற்றிய குருநாதனை ஆனந்த பரவசத்தோடு வணங்கித் துதிக்கிறார். அந்தத் துதியையே மேற்கண்ட ஏழு வரிகளும் கவியழகோடு இயம்புகின்றன.

நுட்பம் என்னவென்றால் மனிதப்பிறவி ஒன்றே பிறவியிலிருந்து உய்வதற்குரிய பிறவியாகும். இதற்குக் காரணம் அறிவின் விரிவும் சிறப்புமே. எல்லா வகையான உயிரினங்களிலும் அறிவின் ஆற்றல் ஒன்று போல் இல்லை. எல்லா உயிர்களிலும் மேலானவாகக் கருதப்படும் மனிதன் தனது ஆற்றலை உணர்ந்து, பேரறிவுப் பொருளான சிவத்துடன் ஒன்றுபட வேண்டும். இதையே அடுத்து வரும் வரிகளிலே சிவபுராணம் தொடர்கிறது.

உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்ய யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்சுடரே

இந்த வரிகளுக்கு மரபு வழியிலே சொல்லப்படுகிற பொருள் ஓங்காரத்திற்கு ஆதி ஒலி என்று கூறுகிறது. அதாவது ஒலிகட்கு முதலாய் எங்கும் நிறைந்திருக்கும் ஓசை என்கிறது. அதோடு, 'வெய்யாய் தணியாய் இயமானனாம்' என்ற வரிக்கு எட்டு உருவங்களுள் 'சூரியன், சந்திரன், இயமானன்' என்ற மூன்றையும் கூறியவாறு என்று தருமையாதீனப் பதிப்பு மரபு வழியிலே பொருள் கூறுகிறது.

சித்தர் வழியிலே இந்த வரிகளுக்குரிய பொருள் நீளமும் விரிவும் கொண்டதாகும். சிவயோகியாருடைய இந்தத் தத்துவ விளக்கத்திலிருந்து சில பகுதிகள் இங்கே உய்த்துக் காண்பதற்கு உரியனவாம். அவை வருமாறு:

"இந்த மேலே கண்ட வாக்கியங்களின் உண்மை அறிந்தவர் திருவாசகத்தைப் படித்து அநுபவம் அறிவர். அல்லாதவர் சொல்நயம் கொண்டு மகிழ்வதுதான் நடைபெறக் கூடும். இந்த உண்மையை வாய்ஞானம் பேசுபவர் யாரும் பிறர்க்கு உணர்த்த முடியாது. திருவாசகத்தின் முதலும் முடிவும் இதை அறிவதில் தானுள்ளது.

நாபிக்குக் கீழ் உள்ள பன்னிரண்டு விரற்கடைப் பிரதேசத்தில் ஓங்காரம் உள்ளது. இதுவே உயிரைக் காப்பாற்றும் நல்ல ஓரெழுத்து. பாவிகள் அதன் பயனைப் பெற்று அனுபவிக்குமாறில்லை. ஆனால், இந்த உண்மையை மிக மேதாவியானாலும் அறிந்துகொள்ள முடியாது. அந்த ஓங்காரம் உள்ள நிலையிலே சிவமும் சக்தியும் உள்ளது.

இதை அறிந்து சாதனம் செய்தால் இம்மந்திரகதி கீழ்மேல் பக்கம் என்று எல்லாத் திசைகளிலும் பரவி, மேல்முகங் கொண்டு செல்லும். இது ஹம்ச என்ற உயிரால் குறிக்கப்படும் மந்திரம்.

பிரணவம் மேலே சென்றால் ஆகாயத்தில் உருவங்கடந்த சிதாகாயத்தில் நாதம் உதிக்கும். அந்த நாதத்தினூடே விந்து மண்டலமும் விளங்கும். அகரகலை என்ற சோமகலை, விந்து மண்டலத்தில் விளங்கும். இவ்விதம் சென்று சென்று மோதுதில் பிரணவம் வளர்ச்சியை அடையும்.

இவைகளுக்கு மேல் மாயாதத்துவம், சுத்த வித்தியா தத்துவம், மகேஸ்வர தத்துவம், சதாசிவ தத்துவம் என்றவைகளைச் சேர்க்கப் பத்து ஆதாரங்களாகி விடும். இவைகளைத் துரியகண்டம் என்று கூறுவர். இவ்வகையாகப் பத்து ஆதாரங்களையும் சேர்ப்பதற்கு மகாவேதா என்று பெயர்.

பிரணவம் என்பது ஆறு ஆதாரத்திற்கு உரிய ஆறு எழுத்துக்களும் ஒன்றாவதில் உள்ளது. ஆறெழுத்து ஆகக் கொள்ளாது, ஓரெழுத்தையே கொண்டு, சாதனம் செய்வாருக்கு அவர்களுடைய உயிரை நிலைநிறுத்திக் கொள்ளலாம்.

பிரணவ உச்சாடணத்தினால் அதன் தொடர்பான பதினைந்து எழுத்துக்களும் அமைகின்றன. அந்தப் பிரணவ உறுப்பான அகரமே ஐம்பத்தோரக்கர மாயிற்று. பிரணவத்தில் விந்து நிலையில் பதின் மூன்று நிலைகள் உள்ளன. நாதவெழுத்தாகிய மகாரத் தொனியால் இவைகளைக் கண்டறிந்து கொள்ளவும்.

தேகத்திற்கு உரிய சகல அறிவும் இடை பிங்கலை சுழுமுனை இவைகளை மூலமாகக் கொண்டுள்ளது. இயல்பாக நடுநாடி யாவருக்கும் சிறந்து தொழிற்படுவதில்லை. அதைச் சிறப்புறும் முறையில் தொழிற்படுத்தி, சிரசில் சேரச் செய்வதால் அமையும் விந்துநாதமாகிய திருவடிகளை நல்லோர் பொருந்தி நிற்பர்.

பரம்பொருளைத் தரிசிப்பதென்றால் நாம் கண்டு கேட்டு அறிந்தனவற்றை ஆதாரமாகக் கொண்டு நம்மனோர் கற்பனையில் உருவான ஒரு தோற்றத்தையோ, ரூபமற்ற அருவத்தையோ தரிசிப்

பதோ, உணர்வதோ அன்று. தரிசிப்பதென்றால் ஞானக்கண் கொண்டு பார்ப்பதும், அதனால் அமையும் ஒரு ஆத்மானுபவமும் வேண்டும். அது அகண்டமாய், ஏகமாய், சர்வ வியாபியாய், சர்வாந்தரியாமியாய் அனைத்திற்கும் ஆதாரமும் ஆதேயமுமாய், நாமரூப பேதங்களற்றதாய், குணங் கடந்ததாய், நித்தியமாய், நிரந்தரமாய், உயிர்த்துடிப்புடையதாய், இடைவிடாது ஓமெனும் இன்பப் பரவச இன்னொலியுடன் கூடியதாய், வித்தில் மரம்போன்று சத்து சித்து ஆனந்த உணர்வுகளைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டுள்ளதாய் உள்ள ஒரு உணர்வுப் பொருளை, நிலையான சத்துப் பொருளைக் கண்கூடாகக் காண்பது, நிதர்சனமாக உணர்வது - அதுவே தான் என உணர்த்த ஆனந்த பரவச நிலையில் என்றுமாய்த் தங்குவது. அப்பேருணர்வே பேருவகையில் தன்னுள்ளும் வெளியிலும், வலுவுடன் சத்தியுடன் மகிழ்ச்சியுடன் தெய்வீகமாகச் செயலாற்றத் தான் என்பது அற்ற பெருநிலை.

இந்த அடிகளுக்குரிய தத்துவப் பொருளே சிவபுராணத்தின் உட்கிடையாகிய சித்தர் ஞானத்தின் செம்பொருளாகும் என்று கூறப்பெறுகிறது. இதனை அடுத்து வருகின்ற பனுவலின் அடிகள் மரபு வழிப் பொருளிலும், சித்தர் வழிப் பொருளிலும் சொல்லளவிலே அதிகம் மாறுபடுவதில்லை. ஆனால் சொல்லுக்குள்ளே உட்பொருளாகப் பொதிந்துள்ள மெய்ஞ்ஞானப் பயிற்சிப் பொருள் சற்று விரிவானதாகும். எனவே, இந்த வரிகளுக்கு உள்ள சமயப் பொருளை முதலில் காண்போம்.

எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிருதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றவும் மனங்கழிய நின்ற மறையோனே

இந்த வரிகளிலே உள்ள சொல்லமைதி எளிதில் பொருள் கொள்ளக் கூடியதே ஆகும். எனவே சமய உலகில் சில சொற்களுக்கு மட்டும் உள்ள சிறப்புப் பொருளை இங்கே காண்போம். அளவு என்ற சொல்லுக்குத் திதி அல்லது இருப்பு என்று சமயிகள் பொருள் கொள்கிறார்கள். இவ்வாறே தொழும்பு என்ற சொல்லுக்கு அடிமை என்ற பொதுப்பொருள் வழியாக, பக்தி உலகிலே இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள ஆண்டான் அடிமை உறவு சிறப்பாகக் குறிக்கப்பெறுகிறது. இவ்வாறே நேரியாய் என்ற சொல்லுக்குப் பொருந்தியிருப்பவனே என்று பொருள் கொள்ளும்பொழுது, பதியைப் போல் பசு அநாதி என்ற கொள்கை வற்புறுத்தப் பெறுகிறது. மாற்றம் மனம் கழிய என்ற சொற்றொடருக்குப் பொருள் கொள்ளும்பொழுது சமயிகள் பரம்பொருளின் 'மனம் வாக்கினில் தட்டாமல் நின்ற' தன்மையை நினைவபடுத்துகிறார்கள். நிறங்கள் ஐந்து என்னும் பொழுது சமயிகள் கூறுகிற பொருளுக்கும் சித்தர்வழிப் பொருளுக்கும் கருத்தாழம் விரிவுபடுகிறது. சமயிகள் சொல்லுகிற பொருள் 'ஐம்

பூதங்களில் இறைவன் கலந்திருத்தலின் அவற்றுக்குரிய ஐந்து நிறங்களும் இறைவனுக்கும் உரியவாயின' என்று கூறுகிறார்கள். சித்தர்கள் இதற்குக் கூறுகிற பொருள் ஆன்மப் பயிற்சியோடு கூடிய ஒளி அனுபவங்களின் நிறவேறுபாடாகும்.

மேலே கண்ட வரிகளுக்கு ஞானிகள் கூறுகிற பொருளின் தத்துவங்களில் மிகவும் முக்கியமானவை வருமாறு:

பிரணவத்தில் உள்ள அ உ ம என்ற மூன்று எழுத்துக்களும் அயனையும் திருமாலையும் உருத்திரனையும் குறிப்பவையாகும். அந்த ஒலியிலே உள்ள உள்ளொளி விந்து நாதங்களைத் தன்னகத்தே கொண்டது.

பூவின் மணம் வெளியிலிருந்து இதழுக்குள் புகுந்து செல்கிற தத்துவமில்லை. அரும்பு மொட்டாகி மலர்ந்து விரியும்போது, அதனுடைய பக்குவத்திற்கு ஏற்ப அதனுள் இருந்து மணம் கமழ்கிறது. அதுபோலவே மனிதரின் உள்ளத்திற்குள் நிற்கின்ற பிரணவமும் பக்குவமான ஆன்ம நிலையிலே அறியப்படுகிறது. இதைத் 'தொழும்பின் முதிர்ச்சி' என்று சித்தர்கள் அழைக்கிறார்கள். இதனையே 'நாற்றத்தின் நேரியாய் சேயாய்' என்ற சொற்கள் குறிப்பதாகச் சித்தர்கள் அழுத்தம் கொடுத்து விளக்குகிறார்கள்.

இனி, சிவபுராணத்தில் மேல் வரிகளுக்கு வருவோம்:

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறிநின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

இந்த அடிகளுக்கு பொருள் கூறுகிற ஞானியர்கள் சமயவாதிகளின் உரைகளுக்கு மேல் மற்றொரு சிறப்புரை கூறுகிறார்கள். அது ஞானப் பயிற்சியின்பாற்பட்ட ஓர் அநுபவ விளக்கமாகும். அதன்படி, ஆத்ம ஞானிகளுக்கு அவர்களுடைய ஒடுக்க நிலையிலே தொண்டைக்குள் ஒருவகையான இனிப்புச்சுவை சுரக்கிறது. அது கறந்த பாலையும் சர்க்கரையும் சிந்தனையில் கொண்டு வருகிற ஓர் அரிய சுவையாகும். இந்தச் சுவையின் அநுபவம் முன்னேற முன்னேற மரணமிலாப் பெருவாழ்வு கிட்டுகிறது. அதுவே 'பிறந்த பிறப்பறுக்கும்' பெற்றிமையாம்.

நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பொருமான் வல்வினையேன் றன்னை
மறைத்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி

ஐந்து நிறங்களைப் பற்றிய ஞான விளக்கத்தைக் கூறும் சித்தர்கள் ஒரு நுட்பமான இரகசியத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். பக்தர்கள் தங்களுடைய தியான முறைக்கு ஏற்ப ஓர் உருவத்தை மனக்கண் முன் நிறுத்திக் கொள்கிறார்கள். ஆனால், ஞானியோ சிவதரிசனம் என்பதைத் தன்னுள்ளேயே ஆன்ம தரிசனமாகக் காண்கிறான். அந்தத் தரிசனம் நிறங்களையும் ஒளி வண்ணங்களையும் தன்னுள் அடக்கியுள்ளதோடு ஓசையாகவும் ஒலி செய்கிறது. இந்த ஒளியும் நிறங்களும், இந்த ஓசையும் ஒலிகளும், வெளியிலிருந்து வருவன அல்ல. சிந்தையினுள்ளே நிகழ்கின்ற சிவதரிசனம் இது. இதைப் பாடுகிற திருமூலர் தம்முடைய சிவதரிசனம் என்ற பகுதியிலே ஓர் அரிய மந்திரமாக வழங்குகிறார்:

சிந்தையி தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல்லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனுருத் தானே

இத்தகைய சிவனது காட்சியைக் கண்டு கண்டு அநுபவித்துப் பாடியுள்ள திருமந்திரப் பாடல்கள் ஏராளமாக உள்ளன.

சிவனுக்கு ஐந்து நிறங்கள் என்று கூறியுள்ள இந்த அடிகளுக்கு ஞானிகள் சொல்லுகிற பொருள், மனிதனுடைய நுண்உடலில் ஏற்படுகின்ற ஐம்பூத நிறங்களின் வண்ணக்கோலமும், அந்தக் கோலத்திலே நின்று விளையாடுகிற கூத்தனுடைய ஆடல்களும் என்பதாம்.

ஞானிகள் வகுத்துக் கூறியுள்ள ஐந்து அடிப்படையான நிறங்கள் ஆவன:

1. மண்ணுக்குரிய நிறம் பொன்னிறமாம்.
2. தண்ணீருக்கு வெண்மை நிறம்.
3. நெருப்புக்குச் செந்நிறம்.
4. காற்றுக்குக் கருமை.
5. வானுக்குரிய நிறம் புகைநிறம்.

மணிவாசகர் இந்த வரிகளிலே இந்த உடம்பின் இயக்கத்தை எத்தகைய தொல்லைதரும் இயக்கம் என்று வருணனை செய்கிறார். யோகிகள் இந்த உடம்பின் இயல்பை இச்சைகளை நோக்கிக் குண்டலினி ஆற்றலைக் கீழே இழுக்கின்ற ஈர்ப்பு என்கிறார்கள். இத்தகைய பருவுடலின் தொல்லைகளிலிருந்து பரமகுருவானவன் இந்த உடம்பை மீட்கிறான். இந்திரிய மயமாக மயங்கித் தொழிற்படுகிற உயிரை மேல்நிலை நோக்கி உயர்த்துகிறான் ஞானாசிரியன். மணிவாசகருக்கு இந்த ஞான அநுபவத்தைப் பரம்பொருளே பரமகுருவாக வந்து அருளுகிறான்.

நிலத்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

இந்த அடிகளுக்கு ஞானிகள் கூறுகிற உரை, ஞானாசிரியனுடைய நல்லருளானது குழந்தையை வளர்க்கும் தாயின் அன்பைப் போன்று தொழிற்படுகிறது என்பதாகும். ஞானாசிரியன் தனது சீடனின் மனத்திலும் உடம்பிலும் வளர்ச்சியினை ஏற்படுத்துகிறான். அதனால் மாணவனுடைய உடம்பிலும் உள்ளத்திலும் சிவமானது தனது கலைகளை வீசிப் படரத் தொடங்குகிறது.

சித்தர்கள் கூறியுள்ள சிவகலைகள் பத்தாகும். அவை:

1. இந்திகை : இந்த ஆற்றல் மாணவனுடைய மாசுகளையெல்லாம் நீக்கவல்லது.

2. தீபிகை: இந்த ஆற்றல் இடையிடின்றி ஒளியைக் கொடுத்துக் கொண்டே இருப்பது.

3. ரோசிகை : இது இறையெழிலைத் தருகின்ற ஒளியாற்றலாகும்.

4. மோசிகை : இது எல்லாப் பிணைப்புகளிலிருந்தும் விடுதலை தருவது.

5. ஊர்த்துவ காமினி : இதுவே கீழே அழுத்தும் ஆற்றலை மேலே செலுத்துகிறது.

6. வியாபினி : எங்கும் விரிந்து பரவுகிற ஆற்றல் இது.

7. வியோம ரூபினி : சிவனுடைய சக்திகளிலே இதுவே விண்வடிவாய் நிற்கும் ஆற்றல்.

8. அநந்தை : நிலைத்து நிற்கும் நிலைபேறு இதுவே.

9. அநாதை : மாணவன் தன்னை நடத்த மற்றொரு நாதனோ, தலைவனோ இன்றி, தன்னைத் தானே நடத்திக்கொள்கிற சுதந்திர சக்தியைத்தருகிற ஆற்றல்.

10. அநாசிருதை : தத்துவங்களைப் பற்றிநில்லாத நிலை.

இந்தப் பத்துவிதமான கலைகளும் சீடனுடைய இயக்கத்திலே முழுமை பெற வேண்டுமானால், ஞானாசிரியனுடைய திருவடி ஞானமும் நல்லருளும் துணை செய்ய வேண்டும். இதைத்தான் நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி என்று மணிவாசகர் பாடுகிறார். இத்தகைய திருவடிப்பேற்றை அருளிய குருநாதர் தாயைப்போல் சீடனின் மனப் பக்குவத்தை வளர்க்கவும் செய்கிறார்.

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே

இந்த வரிகளுக்குப் பொருள் சொல்லும்பொழுது, 'மலர்ந்த மலர்ச் சுடரே' என்பதை, விரிந்து விளங்குகின்ற ஆயிரமிதழ்த் தாமரையாகிய சகஸ்ரதளத்தில் சுடரும் ஒளியே என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

சித்தர்களுடைய மொழியிலே ஆரியன் என்ற சொல்லுக்குக் குருநாதன் என்று பொருள். இந்தப் பொருளை உள்ளத்திற் கொண்டே குள்ளச்சாமி போன்ற சில சித்தர்களோடு தொடர்பு கொண்டிருந்த தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார், ஆரியர் என்பவர் யார் என்பதற்கு ஓர் அருமையான இலக்கணம் கூறியுள்ளார்:

பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தில் எறிந்தே
ஐயுற வின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமென்றிங் கூதடா சங்கம்..

இனி, மணிவாசகருடைய அடிகளிலே வரும் ஆறு என்பதற்கு ஞானநதி என்ற நுண்பொருளை ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே

அண்டத்திலும் பிண்டத்திலும் கலந்தும் அவற்றைக் கடந்தும் நிற்கிற பரம்பொருள்; ஒளிபெறாதவர்களுக்குப் புலப்படுவதில்லை. அவர்களுடைய உடம்புக்குள் உறைந்தும், அவர்களுடைய புலனுக்குப் புலனாகாதவாறு ஒளிக்கும் ஒளியாக அது நிற்கிறது.

நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே

மணிவாசகரின் இந்த வரியை ஆழ்ந்து சிந்தித்தோமானால் கீழ்க்கண்ட திருமந்திரப் பாடலின் உட்கருத்தே நினைவுக்கு வரும்.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியில் லோரே

இங்கே திருமூலர் குறிப்பிடுகிற கல்வி, சித்தர்களின் ஞானக் கல்வியாகும். அது ஞானாசிரியன் நேரில் தோன்றிக் கற்பிக்க வேண்டிய ஆன்மக் கல்வியே. இந்தக் கல்வி அனுபவத்தைப் பெற்ற மணிவாசகரின் வெளியீடே மேற்கண்ட சிவபுராண வரியாகும்.

இன்பமும் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

இந்த அடிகளுக்குப் பொருள் கூறுகிற ஞானியர்கள், பருவுடலையும் தொடர்புபடுத்தி இயக்குகின்ற இறையாற்றலின் தத்துவத்தை எடுத்துக் கூறுகிறார்கள்.

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே

வெளியே செல்லுதல், உட்புகுதல் ஆகிய மூச்சின் இயக்கத்திலிருந்து இந்த உடம்பின் எல்லா இயக்கங்களையும், ஒரு சட்டப்படி நடைபெறுமாறு செய்வது ஆன்ம ஆற்றலே ஆகும். அந்த ஆற்றலுக்குக் காவல் புரிவதும், அதனை வழிப்படுத்துவதும் ஞானாசிரியனாகிய காவலனேயாம்.

உயிரணுக்கள் நொடிதோறும் மாறிக்கொண்டே இருப்பவை. இந்த மாற்றத்தின் நடுவே தேற்றமாக அறிவுத் தெளிவே ஆன்மஞானம். அந்த ஞனாத்தை அருளி உள்ளத்திலே அமுதம் ஊறும்படியாகச் செய்தவன் பரமகுருவாகிய பரம்பொருளே.

வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே

பொய்கெட்டு மெய்யாதல் என்பது சிவதத்துவத்தில் அழுந்தி அறிவின் உருவிலே நிலையாக நிற்றல் என்பதாகும். யோகிகளும் ஞானிகளும் குண்டலினி கொண்டு மகேசர் நிலையான ஒளியையும் சதாசிவ நிலையான ஒலியையும் தாண்டி, பேரொடுக்கத்திலே நிற்றல் என்று கூறுவார்கள்.

இத்தகைய மெய்யர்களும் இரண்டு வகையில் அடங்குவர். ஒருவகையினர் உயிரையும், உயிருக்கு உயிரையும் உணர்ந்து ஒடுங்கி விடுபவர்கள். இரண்டாவது வகையினர் ஒடுக்கம் அமையாமல் மெய்ப் பொருளோடு அறிவுநிலையில் தோய்ந்து இயங்குகிற ஞானிகள். இவ்விருவகையினரும் புலன்களை வென்றவர்களே. எனினும், முன்வகையினருக்கு மறுபிறவி இல்லை. பின்வகையினர் பிறவிக்கும் வரலாம்; அல்லது, சூக்கும உலகிலும் இயங்கலாம். இவ்விரு ஞானிகளையும் மீண்டும் பிறவிக்கு வராமல் தன்னொடுக்கத்தில் நிற்கச் செய்பவன் பரமகுருவேயாவான்.

நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

நள்ளிருள் என்பதற்கு அண்டத்தினுள்ளும் பிண்டத்தினுள்ளும் படர்ந்துள்ள மாயை இருள், புற இருள், அக இருள் என்பது ஞானியர்

பொருள். தில்லை என்பதற்கு உடம்பாகிய இதயக்கோயில் என்றும், தெற்கு என்பதற்குத் தலையின் தென்புறமாகிய ஆட்சிநிலை என்றும் யோகியர்கள் பொருள் கூறுகிறார்கள்.

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

வாக்கினால் உணரவோ, சொல்லவோ, அல்லது மாணவர்க்கு உணர்த்தவோ, இயலாத மெய்ப்பொருளே சிவமாகும். அத்தகைய சொல்கடந்த பொருளைச் சிவபுராணம் பாட்டாகச் சொல்லியுள்ளது. எனவே அதனுடைய பொருளை மெய்யாக உணர்வதற்கு ஞானாசிரியனுடைய திருவருளே கூட்டுவிக்க வேண்டும். ஏனென்றால் மணிவாசகர் குறிப்பிட்டவாறு, அவன் தாளை வணங்குவதற்கும் அவன் அருளே வேண்டியுள்ளது. அவன் அருளின்றி அவனை நாம் அறிவதற்கில்லை. இதனையே திருமூலரும்,

சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை அறிய கிலனாகில்
எந்தையை யானும் அறியீ கிலேனே

என்ற எழிலோடு பாடியுள்ளார். மணிவாசகர் கூறுகின்ற இந்த மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் சிவன் திருவடிக்கீழ் நிலையாக நிற்பார்கள்; பிறவித் துயரை வென்றவர்களாவார்கள் என்பது கருத்து. அதாவது உயிர் வளர்ந்து பக்குவமாகி, உடம்பு இல்லாத நிலையிலே அமரவாழ்வு பெற்று, நிலைபெறக் கூடும் என்பதே இந்தச் சிவபுராணத்தின் அடிப்படைக் கருத்தாகும். இத்தகைய நிலை பேறான வாழ்வையே, இறைவன் திருவடிக்கீழ் நிற்றல் என்று சமயிகள் கூறுகிறார்கள்.

துவைதம், அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், சைவ சித்தாந்தம் என்னும் சமயக் கொள்கைகளிலே, வீடுபேறு என்னும் நிலையைப் பற்றிய சர்ச்சைகள் பற்பல வேறுபாடுகளுடன் நிகழ்கின்றன. இந்நிலையிலே உயிரின் வளர்ச்சியைச் சொல்லி, அறிவினாற்றல்களிலே புல்லிலிருந்து மனிதன்வரை எப்படி முன்னேற்ற நிலைகள் அமைந்துள்ளன என்பதை நினைவுகூர்ந்து, மெய்யறிவின் துணைகொண்டு சிவபுரத்து வாழ்வாகிய அமர நிலையை, உடம்பின்றியே உயிர் எய்தக்கூடுமென்பதையும் உணர்த்துவதே, சிவபுராணத்தின் தனிச்சிறப்பாகும். இதுகாரணம் பற்றியே, மரணமிலாப் பெருவாழ்வு நோக்கி மனிதகுலத்தை அழைத்துச் செல்கிற சித்தர்மரபு, சிவபுராணத்தை ஒப்புநூலாகக் கொண்டு போற்றிவந்திருக்கின்றது. இந்த நோக்கிலே பார்தால் சிவபுரணாத்தின் சித்தரிலக்கியப் பண்பும், அதிலுள்ள ஞான ஒண் பொருளின் தனிச்சிறப்பு எத்தகையது என்பதும், நமக்குப் புலனாகும்!

8. கீர்த்தித் திருவகவல்

(சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை)

திருத்தில்லையில் அருளியது.

(புலீயூரையடைந்த அடிகளார் "கண்ட பத்தை" உரைத்த பின் ஆனந்த கூத்தருடையு திருமேனியிலீடுபட்டு அநுபூதிமிக்கு அசைவற்று நின்றார் இந்நிலையறியாத, மெய்க்காவலாளர்கள் 'கனகசபையை விட்டுக் கீழேயிறங்கு' என்று கடிந்து கூறினார்கள். அவ்வுரை அடிகளார் செவிகளிற் புகுந்திலது. இவர் சிதானந்தப் பெருவெளியில் ஓங்காது குறையாது விளங்குகின்ற சிவானந்தப் பிரகாசத்தில் திளைத்துத் தம்பம்போல் நின்றார். இதுகண்ட காவலர்கள் என்ன இவர்; போமென்றும் போகார்; இரையும் ஆடார்; பித்துக் கொண்டார் போலும் என்று இரங்கிநின்ற போது 'சிவசிவ' என்று இவர் வாயசைந்தது. கைகள் சிரமேற் குவிந்தன. குஞ்சித பாதத்தை மீண்டும் தலையால் வணங்கித் திருப்புலீச்சரம் சார்ந்தார். அங்கிருந்து அனந்தேச்சரத்தை வணங்கிக்கொண்டு திருவீதி வலமா வரும்போது கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய மூன்று திருவகவல்களையும் சொல்லிக்கொண்டே வந்தார்.

இதனாலேயே இன்றும் சைவத் தமிழுலகம் திருக்கோயில் வலம் வருகின்ற காலத்து வீண்பேச்சும் சழக்குரையும் பேசாது இவ்வகவல்களைப் பாராயணம் செய்துகொண்டே வருகின்றது. கூட்டமாக வழிபடுபவர்களும் இதனைச் சொல்லிக்கொண்டே வலம்வருதல் மரபாம்).

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா லோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்தும்
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திர ரத்திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்

நந்தம் பாடியின் நான்மறை யோனாய்
அந்தமில் அரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்

கூறுடை மங்கையும் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொருள் வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனகம் இசையப் பெறாஅ
தாண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி யாண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்

ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவளர் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்

குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய வதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரின் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டீர் தன்னில் ஈண்ட விருந்தும்

தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு தனில் ஈண்ட இருந்து

படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியோடு மகிழ்ந்த வண்ணமும்

சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனில் சைவ னாகியும்

துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்புய மதனில் அறம்பல அருளியும்

குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்

தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைத்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

அந்தமில் பெருமை யருளுடை யண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குடன் அறுக்கும்

ஆனந் தம்மே யாறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண்ட ருளியும்

மூல மாகிய மும்மல மறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்

பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டும வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை அருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்

ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி

நாத நாத என்றழு தரற்றிப்
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்

பொலிதரு புலீயூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்.
ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

சிவபுரணாத்தைப் போலவே இந்தப் பனுவலும் ஞானியர்களுடைய பேருண்மைகளின் நிலைக்களனாகத் திகழ்கிறது. சித்தர்களின் தத்துவங்களை ஆராய்கிறவர்களுக்கு இந்தக் கீர்த்தித் திருவகவலும் ஒரு மிக முக்கியமான ஒப்புநூலாக அமைகிறது.